சுருக்கம்

நகர்ப்புற வளர்ச்சி – 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கு உட்பட்டு எவ்வித மாற்றமும் இல்லாமல் 30.06.2027 வரை விண்ணப்பிக்க காலநீட்டிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.


---

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை

**அரசாணை (நிலை) எண். 148**

நாள்: 27.07.2026
ஸ்ரீ பராபவ வருடம், ஆடி–11,
திருவள்ளுவர் ஆண்டு 2056
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.78. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 13.10.2017.
3. அரசாணை நிலை எண்.55, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 2.5.18.
4. அரசாணை (நிலை) எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 05.02.2019,
5. அரசாணை (நிலை) எண்.16, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை, நாள் 25.01.2021.
6. அரசாணை (நிலை) எண்.40, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை, நாள் 26.02.2021.
7. அரசாணை (நிலை) எண்.118, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை, நாள் 04.09.2023.
8. அரசாணை (நிலை) எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [ந.வ.4(1)] துறை, நாள் 21.11.2023.
9. அரசாணை (நிலை) எண்.70. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 15.05.2025.
10. அரசாணை (நிலை) எண்.71. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 21.05.2025.
11. அரசாணை (நிலை) எண்.13. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 27.01.2026.
12. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.21601/2023/TCP 1, நாள் 19.06.2026.

------------

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், அரசானது, 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுமதியற்ற மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு அதில் குறைந்தபட்சம் ஒரு மனையாவது விற்கப்பட்டு அதற்கான விற்பனைப்பத்திரம் 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள 03.11.2017 வரை ஆறு மாத காலம் அவகாசம் வழங்கி ஆணை வெளியிட்டது.

2. மேலே இரண்டிலிருந்து ஒன்பதாவது வரை படிக்கப்பட்ட அரசாணைகளின் வழி இந்தக் கால அவகாசம் 30.06.2026 வரை நீட்டிக்கப்பட்டது.

3. மேலே பத்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் தனிமனையினை வாங்கிய பொதுமக்கள் வரன்முறைக்கு உரிய காலத்தில் விண்ணப்பிக்காமல் இருந்தாலும் அவர்கள் பயன்பெறும் வகையில், 20.10.2016–க்கு முன் பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு அத்தனிமனையினை எவ்வித காலக்கெடுவுமின்றி இணைய வழிமூலம் விண்ணப்பம் பெற்று ஏற்கனவே உள்ள விதிகளில் மாற்றமில்லாமல் வரன்முறைப்படுத்திக் கொள்ளலாம் என அரசு ஆணையிட்டுள்ளது.

4. மேலே பதினோறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்கூறிய கால அவகாசம் வழங்கப்பட்டமைக்கு, தமிழ்நாடு அங்கீகரிக்கப்படாத மனைபிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்தும் விதி 2017– இல் உரிய திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

5. மேலே பன்னிரெண்டில் படிக்கப்பட்ட நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதத்தில், மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்தினை ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கு உட்பட்டு எவ்வித மாற்றமும் இன்றி இணையவழி மூலம் விண்ணப்பித்து இத்திட்டத்தில் அமையும் விற்கப்பட்ட/விற்கப்படாத அனைத்து மனைப்பிரிவுகளையும் வரன்முறைப்படுத்திக் கொள்ள மேலும் 12 மாத காலங்களுக்கு நீட்டிப்பு வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

6. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுமதியற்ற மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு அதில் குறைந்தபட்சம் ஒரு மனையாவது விற்கப்பட்டு அதற்கான விற்பனைப் பத்திரம் 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பத்திரப்பதிவு செய்யப்பட்டிருப்பின் அந்த மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனைப்பிரிவிற்கும் வரன்முறைக்கோரி விண்ணப்பிப்பதற்கான கால

அவகாசத்தை, தமிழ்நாடு அங்கீகரிக்கப்படாத மனைபிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைபடுத்தும் விதி 2017-இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கும் உட்பட்டு எவ்விதமாற்றமும் இல்லாமல் 30.06.2027 வரை கால நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடுகிறது. மேலும், இத்திட்டத்தில் இணையவழி மூலம் மட்டுமே மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த விண்ணப்பிக்க இயலும்.

7. தமிழ்நாடு அங்கீகரிக்கப்படாத மனைபிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்தும் விதி 2017-இல் இத்திட்டம் தொடர்பான உரிய திருத்தம் பின்னர் வெளியிடப்படும்.

8. இது தொடர்பாக ஒரு செய்தி வெளியீடு வெளியிடுமாறு நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். கிர்லோஷ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை-600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், (நிதி),
சென்னை-600 009.
அரசுச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை,
சென்னை-600 009.
அரசுச் செயலாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை,
சென்னை-600 009.
அரசுச் செயலாளர், சட்டத் துறை, சென்னை-600 009.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை - 600 107.
உறுப்பினர்-செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை- 600 008.

<u>நகல்:</u>
மாண்புமிகு அமைச்சர் (வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை - 600 009.
அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர்,
சென்னை-600 009.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர்,
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
சென்னை - 600 009.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்
(அ.ந.மு–1/வரவு செலவு) துறை, சென்னை – 600 009.
பொதுத் (SC) துறை, சென்னை–600 009.
இருப்புகோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பே. ஹரிகோபி 27/7/26
பிரிவு அலுவலர்